## தொடன்கொட பிரதேச சபை

## களுத்துறை மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 27 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, தொடன்கொட பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொடன்கொட பிரதேச சபை நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த ரூபா 3,075,000 இற்கான 4 செயற்திட்டங்கள் 2012 ஆம் ஆண்டிற்கான செலவினத்திற்கு வரவு வைக்கப்பட்டு கடன்கொடுத்தோராகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் இறுதியில் கைத்தொழில் செலவு மற்றும் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 3,075,000 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் பெறவேண்டிய சம்பளத்தின் மீளளிப்பு மீதியான ரூபா 1,556,501 தொகை பிரா.ச. 19 இன் சம்பள மீளளிப்புப் பெறுவனவிற்காகச் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 100,080,640 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,626,457 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,930,415 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| (i) | வீதவரியும் வரியும் | 3,571 | 2,010 | 6,793 |
| (ii) | வாடகை | 157 | 113 | 170 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 113 | 112 | 116 |

**2.2.2 வீதவரி**

(அ) வருடாந்த வீதவரி மதிப்பீடு ரூபா 2,492,691 ஆகக் காணப்பட்டதுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையான வீதவரி மீதி ரூபா 4,924,718 ஆகக் காணப்பட்டது. இம் மீதியில் மீளாய்வாண்டிற்கு உரித்தான ரூபா 1,432,126 தொகையும் முன்னைய ஆண்டிற்கு உரித்தான ரூபா 3,492,592 தொகையும் நிலுவையாகக் காணப்பட்டன.

(ஆ) சபை இறுதியாக 2008 ஆம் ஆண்டின் போது வீதவரி மதிப்பீடு செய்திருந்ததுடன் 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை அங்கீகரிக்கப்பட்டிருந்த கட்டிட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 392 ஆகக் காணப்பட்டன. 2013 சனவரி 24 ஆம் திகதி வரையில் இதில் 39 திட்டங்களுக்கு மாத்திரமே இணக்கச் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. இணக்கச் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிராத அங்கீகரிக்கப்பட்ட 353 திட்டங்கள் தொடர்பாக உரிய கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டுள்ளனவா என ஆராய்ந்தறிந்து தற்காலிக மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு வீதவரி அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 ஏக்கர் வரி**

(அ) 2012 ஆம் ஆண்டிற்கான ஏக்கர் வரி பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 96,924 ஆகக் காணப்பட்ட போதிலும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையான மீதி ரூபா 1,292,745 ஆகக் காணப்பட்டன.

(ஆ) ஏக்கர் வரி அறவீடுகள் மேற்கொள்ளப்பட்ட 4 வலயங்களில் 126 ஆதனங்கள் காணி ஏலவிற்பனை, பிள்ளைகளிடையே காணிகள் பகிர்ந்தளித்தல், விற்பனை செய்தல் ஆகிய காரணங்களால் ஏக்கர் வரிப் பதிவேட்டிலிருந்து அகற்றப்பட வேண்டியதாக வருமான நிர்வாகியால் ஆய்வொன்றின் மூலம் 2012 ஆகஸ்ட், செப்தெம்பர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களின் போது சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 வாடகை**

(அ) நேபட பொதுச் சந்தையில் கடை இல. 129, 1999 ஆம் ஆண்டு முதல் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 1999 ஏப்ரல் 30 ஆம் திகதியின் பின்னர் வாடகை செலுத்துனரால் வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமலும் வாடகைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படாதும் இருந்தமையால் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 21,000 தொகை நிலுவையாகக் காணப்பட்ட போதிலும் கடை சபைக்கு உரித்தாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொடங்கொட பொதுச் சந்தையில் கடை இல. 20 ஐ வாடகைக்குப் பெற்ற வாடகைசெலுத்துனரிடமிருந்து 2003 முதல் 2011 பெப்ரவரி வரை அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 24,456 தொகையான நிலுவை வாடகை கணக்காய்வுத் தினமாகிய 2013 சனவரி 23 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2008 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து நிலவிவரும் ரூபா 38,319 ஆன இறைச்சிக் கடை மீதி அறவிடப்படுவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2013 சனவரி 23 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 தற்காலிக கடைகளும் நிலப் பகுதி வாடகையும்

தற்காலிக கடைகளும் நிலப் பகுதிகளும் கேள்விக்கிடப்படுகையில் முறையான பிரசுரிப்பு அறிவித்தல் முறையொன்று பின்பற்றப்பட்டிராத காரணத்தால் கேள்வியிடப்பட்ட 23 ஆதனங்களில் 16 இற்கு மாத்திரம் ஒரு விண்ணப்பத்தின் படி விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இவற்றிற்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தன. எஞ்சிய 7 ஆதனங்கள் தொடர்பாக மீள கேள்வி கோரப்பட்டிருந்தது.

### 2.2.6 ஏனைய வருமானம்

#### (அ) மணல் தளம் வாடகைக்கு வழங்கல்

தெபுவன ஆற்றுப்பகுதியில் மணற்தளம் 2012 ஆம் ஆண்டிற்கான வாடகை செலுத்தியுள்ள வாடகை செலுத்துனர் 2011 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டிய வாடகைத் தொகையான ரூபா 34,000 ஆனது 2012 ஒக்டோபர் 23 ஆம் திகதி வருமான நிர்வாகியால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அப் பணம் அலுவலகத்திற்குச் செலுத்தப்பட்டிராமை கண்டறியப்பட்டது.

#### (ஆ) விநோத வரி வருமானம்

கங்இம இளைஞர் அமைப்பால் 2012 செப்தெம்பர் 28 ஆம் திகதியில் உள்ளவாறு ரெஜிதவத்த விளையாட்டரங்கில் ஒழுங்கமைக்கப்பட்ட ‘‘சுபர் கோல்ட் கலர் நயிட் 2012’’ நிகழ்ச்சிக்காக அறவிடப்பட வேண்டியிருந்த விநோத வரித் தொகை 2013 சனவரி 24 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படாதிருந்தது.

**2.2.7 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 7,767,897 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 11,706,724 |

**2.3 ஒப்பந்த நிருவாகம்**

**2.3.1 அட்டோராவில வீதிக்கு பிணைப்புக்கல் பதித்தல்**

மகநெகும செயற்திட்டத்தின் கீழ் மேற்குறித்த வீதி 174.05 மீட்டர் நீளம் 2.7 மீட்டர் அகலத்தில் பிணைப்புக்கல் இடப்படுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 873,674 தொகை செலவிடப்பட்டிருந்தது.

வீதியின் குறுக்கே செல்லும் நீர் வழி காணப்பட்டதுடன் அத் நீர் வழிக்காக 8.3 மீட்டர் அளவு இடமளிக்கப்பட்டு மீள பிணைப்புக்கல் பதிக்கப்பட்டிருந்த போதிலும் வீதியில் நடந்து செல்லும் பாதசாரிகளுக்கு நீர் வழிக்கு மறுபக்கத்திற்குச் செல்வதற்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டிராததுடன் நீர்வழி அருகாமையில் 0.9 சதுர மீட்டர் அளவிலான கற்கள் கழன்றிருந்தமை 2013 சனவரி 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**2.3.2 வவுலகொட தொடங்கொட 01 மைல் கல்லிற்கு அருகாமையில் திரு. தயா குணவர்தன அவர்களின் வீடு வரையான வீதி**

மகநெகும செயற்திட்டத்தின் கீழ் மேற்குறித்த வீதியின் 114.5 மீட்டர் நீளம் 2.5 மீட்டர் அகலத்திற்கு பிணைப்புக் கல் பதிக்கப்படுவதற்கு ரூபா 611,243 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

2013 சனவரி 23 ஆம் திகதி வேலை அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(அ) மேற்குறித்த வீதியின் 210 மீட்டர் நீளம் 2.7 மீட்டர் அகலத்திற்கு பிணைப்புக்கல் பதிக்கப்படுவதற்கு ரூபா 1,140,000 தொகைக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அளவீட்டின் படி வீதியின் முழு நீளம் 97.5 மீட்டர்களானமையால் 112.5 மீட்டர்கள் அதிகமாக மதிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) அவ் வீதியில் ஆரம்பம் முதல் இறுதி வரை 97.5 மீட்டர் நீளம் 2.7 மீட்டர் அகலத்திற்கு (263.25 சதுர மீட்டர்) ஏறத்தாழ ஒரு சதுர மீட்டருக்கு 38 பிணைப்புக் கற்களின் படி பதிக்கப்பட்டிருந்தன. இதன் படி பூர்த்திசெய்யப்பட்டிருந்த 263.25 சதுர மீட்டருக்காக ஏறத்தாழ பதிக்கப்பட்டிருந்த பிணைப்புக் கற்களின் எண்ணிக்கை 10000 ஆகக் காணப்பட்டது. எனினும், இறுதிக் கொடுப்பனவு அறிக்கையின் படி 12000 பிணைப்புக் கற்களுக்காக ரூபா 393,960 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தமையால் 2000 பிணைப்புக் கற்களுக்காக ரூபா 65,660 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மேற்குறித்த வீதி சபைக்குரித்தான வீதி அல்ல என்பது வீதிப் பதிவேட்டின் படி அவதானிக்கப்பட்டதுடன் நலனாளிகளின் எண்ணிக்கை 6 மாத்திரமே என்பதுவும் அவதானிக்கப்பட்டது.

**2.3.3 செயற்படுத்தப்படாத செயற்திட்டம்**

மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2012 இன் கீழ் துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சால் தொடங்கொட பிரதேச சபைக்கு ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 33,301,000 தொகையான 41 செயற்திட்டங்கள் கணக்காய்வுத் தினமாகிய 2013 சனவரி 24 ஆம் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 செயற்பாட்டு செயற்திறனின்மை**

**2.4.1 முற்பணக் கொடுப்பனவு**

(அ) 2009 முதல் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 241,277 கூட்டுத்தொகையான 6 முற்பண மீதிகள் கணக்காய்வுத் தினமாகிய 2013 சனவரி 23 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 1991 முதல் 2006 வரை வழங்கப்பட்டிருந்த ரூபா 173,523 கூட்டுத்தொகையான 25 முற்பண மீதிகளும் காணப்பட்டன.

(ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) இன் பிரகாரம் ஒரு ஆண்டிற்கு வழங்கப்படக்கூடிய முற்பணத் தொகை ரூபா 20,000 இற்கு மேற்படலாகாத போதிலும் 2 சந்தர்ப்பங்களின் போது ரூபா 223,825 கூட்டுத்தொகையான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

**2.4.2 சொத்துக்கள் மெய்மையாய்வு**

சபையால் ஒவ்வொரு ஆண்டின் போதும் மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2007 ஆம் ஆண்டு முதல் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.3 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

வருடாந்த கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.5 மிரிஸ்பெலவத்த வீதி நிர்மாணிப்பு தொடர்பாக நட்டஈட்டுத்தொகை செலுத்தப்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொமட்புவல மிரிஸ்பெலவத்த சுதுவாதேவகே வில்பட் என்பவரின் காணியில் தென்பகுதி எல்லையில் காணப்பட்ட சுவர் அவருக்கு அறிவித்தல் கொடுக்கப்படாது சபையால் 1999 நவம்பர் 27 ஆம் திகதி உடைக்கப்பட்டு காணியில் மேலும் 3 அடிகள் பெறப்பட்டு நேபட பிரதான வீதியில் இருந்து மிரிஸ்பெலவத்தவைத் தொடர்புபடுத்தும் 4 ½ அடி அளவிலான ஒற்றையடிப்பாதை 7¼ அடியாக அகலமாக்கப்பட்டமையால் நேர்ந்த நட்டத்திற்காக தலைவருக்கு எதிராக எம்ஆர் 4373 ஆம் இலக்க வழக்கு களுத்துறை மாவட்ட நீதிமன்றத்தில் 2000 சனவரி 24 ஆம் திகதி தொடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2003 பெப்ரவரி 20 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த வழக்குத் தீர்ப்பின் படி ரூபா 237,000 தொகையும் முத்திரைக் கட்டணம், தோன்றியமை மற்றும் ஏனைய பதிவேட்டிற்கான செலவினமாக ரூபா 31,975 தொகை நட்டஈடொன்று செலுத்தப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(இ) மேற்குறித்த வழக்குத் தீர்ப்பை மாற்றியமைப்பதற்காக களுத்துறை குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 56/2004/எப் ஆம் இலக்கத்தின் கீழ் சபையால் மேன்முறையீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் தீர்ப்பில் மாற்றம் இல்லாது 2011 மே 19 ஆம் திகதி மேற்குறித்த தீர்ப்பே வழங்கப்பட்டிருந்தது. இதற்காகவும் சபை ரூபா 56,000 தொகையான செலவை ஏற்றிருந்தது.

(ஈ) மேற்குறித்த வழக்கின் காரணமாக சபைக்கு ரூபா 324,975 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 128, 132, 134 மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் 2008 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய டபிள்யூபீ/எல்ஜீடீ/10/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் படி உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று செயற்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்